African Cheetahs.

*286. Q.—Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Electricity be pleased to state whether the Government of Tamil Nadu propose to purchase some African cheetahs?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: ஆப்ரிக்கா அல்லது பெர்சியா விலிருந்து இரண்டு சிறுத்தைப் புலிகள் இறக்குமதி செய்யப் படலாம் எனத் தமிழ்நாடு வன விலங்கு வாரியம் செய்த பரிவுரை யின் மேல் அதுகுறித்து இந்திய அரசுக்கு எழுதிக் கேட்கப்பட்டது. சிறுத்தைப் புலிகள் ஆப்பிரிக்காவில் மட்டுமே உள்ளன என்று அவர்கள் இந்த அரசுக்குத் தெரிவித்தனர். மேலும் இது குறித்து சோமாலியாவில் உள்ள இந்தியத் தூதரகத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் அவர்கள் கருத்து தெரிவித் திருந்தனர். எனினும், சோமாலியாவில் விலங்கினக் காட்சிச்சாலை எதுவுமில்லாததால் வெளிநாட்டு விலங்குகளை பரிமாற்றம் செய்து கொள்ள இயலாது என்று சோமாலியாவில் உள்ள தூதரகம் பதிலளித்தது. எனவே இது குறித்து மேற்கொண்டும் நடவடிக்கை தொடரப்படவில்லை.

திரு. கே. விநாயகம்: சிறுத்தைப் புலிகளின் எண்ணிக்கை நம் தேசத்தில் குறைந்துகொண்டே வருகிறது. அதைச் சுடக் கூடாது என்று நாம் எவ்வளவுதான் சட்டம் போட்டிருந்தாலும் வேட்டைக் காரர்கள் சுட்டுவிடுகிறார்கள். ஆகவே சிறுத்தைப் புலிக்காக தனிச் சரணாலயம் ஏற்படுத்தி அங்கே அவை இயற்கையில் நம்மைப்போல அதன் ஜனத்தொகை பெருக்கத்திற்கு வழி செய்ய ஏற்பாடு செய் வார்களா?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: தமிழ்நாட்டில் புலிகள் தான் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சரணாலயத்தில் இருக்கிறது. சிறுத்தைகள் கிடையாது. அதைப்பெறுவதற்காகத்தான் முயற் சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தற்போது வசதியில்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி: சிறுத்தைப் புலிகளை அதிகப்படுத்து வதனால் பிரயோசனம் என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: பொதுவாக எல்லா மாநிலங் களிலும் மலைகளில் வன விலங்குகள் பாதுகாக்கப்படவேண்டும் என்று வைத்துக்கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் தான் சிறுத்தைப் புலியைக் கொண்டுவர முயற்சி செய்கிறோம். கிடைக்க வில்லை.

பறவைகள் உய்விடம்

*287 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

நமது மாநிலத்தில் பறவைகள் எந்தெந்த இடங்களில் பாது காக்கப்படுகின்றன?